**காலநிலைக்கேற்ற துரித நீர்பாசன கமத்தொழில் செயற்திட்டம் -2021**

காலநிலைக்கேற்ற துரித நீர்பாசன கமத்தொழில் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையேயான 2019 ஏப்ரல் 11 ஆந் திகதிய 6346-LK இலக்க பண அளிப்பு மற்றும் நிதிசார் தகவல் கடிதம் மற்றும் நிதியளிப்பு உடன்படிக்கையின் III (ii) ஆம் உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்தரைகளுதம் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கமத்தொழில் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் சர்வதேச அபிவிருத்தி சங்கம் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. தெரிவு செய்யப்பட்ட வறண்ட பிரதேசங்களில் சிறு பற்றுநிலக் கமத்தொழிலின் உற்பத்தி திறனையும் காலநிலை எழுச்சியையும் முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டத்தின் செயற்பாடுகளானது கமத்தொழில் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல், கமத்தொழிலுக்கான நீர் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய மூன்று பகுதிகளின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 25,200 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 140 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், அதில் ரூபா 22,500 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 125 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மீதமுள்ள தொகையான ரூபா 2,700 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொ 15 மில்லியன் இலங்கை அரசினாலும் நலனாளிகளினாலும் நிதியளிக்கப்படுவதாக எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2019 மே 07 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2024 யூன் 30 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| இல | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணக் கோவை – 103 நி.பி மற்றும் 104 நி.பி | நிதி பிரமாணத்தின் பிரகாரம் ரூபா 144,300 பெறுமதியான மடிக் கணினிகள் தொலைந்தமை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக அறிக்கையொன்று பெற்றுக் கொள்வதற்காகா வட மத்திய மாகாண பிரதி செயற்திட்ட பணிப்பாளரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அறிக்கை பெறப்பட்டவுடன் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பொறுப்பு கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 09/2009 மற்றும் 09/2009 (1) இலக்கங்களையுடைய 2009 ஏப்ரல் 16 திகதிய மற்றும் 2009 யூன் 17 திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் | செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் வருகை மற்றும் வெளியேறல் பதிவு செய்வதற்கு கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்க-வில்லை. | பதவியணியின் வருகை மற்றும் வெளியேறலினை பதிவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் கைவிரல் அடையாள இயந்திரம் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |
| (இ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 34 ஆம் பிரிவு | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம் முகாமைத்துவ தகவல் அமைப்பு (MIS) ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ தகவல் அமைப்பு ஸ்தாபித்தல் பெறுகை செயன்முறையின் கீழுள்ளது. | தாமதமின்றி முகாமைத்துவ தகவல் அமைப்பு ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2019 மார்ச் 15 திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை | செயற்திட்ட இயக்க குழு (PSC) கூட்டம் இரு மாதங்களுக்கு ஒரு தடைவ நடத்தப்படல் வேண்டும். எவ்வாறெயினும் மீளாய்வாண்டினுள் மூன்று செயற்திட்ட இயக்க குழுக் கூட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டிருந்தது. | 03 தேசிய செயற்திட்ட இயக்க குழு கூட்டங்கள் 2021 ஆம் ஆண்டில் கொவிட் சூழ்நிலையிலும் நடத்தப்பட்டன. | சுற்றறிக்கையின் ஆலோசனைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் இயக்க குழு கூட்டம் உரிய காலத்தில் நடத்தப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | பின்னிணைப்பு 2, செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் (PAD) 21 ஆம் உப பிரிவு, 2016 யூன் 10 திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1/2017 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை | செயற்திட்டத்திற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டில் போதுமான உள்ளக உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டி-ருக்கவில்லை. | செயற்திட்டத்திற்காக 2022 ஏப்ரல் மாதத்தில் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். | உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் செயற்திட்டத்தின் ஊடாக நியமிக்கப்படல் வேண்டும். |

**3. பௌதீகச் செயலாற்றல்**

**3.1 செயற்திட்டததின் நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| **இல** | **கூறு** | **2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **முகாமைத்துவ கருத்துரை** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|---|---|---|
| | | **எதிர்பார்க்கப்பட்ட பௌதீகச் செயலாற்றல்** | **அடையப்பட்ட செயலாற்றல** | **சதவீதம்** | | |
| (i) | யால பயிர்செய்கை நிகழ்ச்சித் திட்டம் | 3676.8 ஹேக்கர் | 1194.1 ஹேக்கர் | 32.47 | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. தொற்று நிலையினால் செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதித்திருந்ததுடன் இந்த ஆண்டில் நிகழ்ச்சி திட்டங்கள் விவைப் படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. | பணிகளை விரைவுப்-படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் |
| (ii) | அனைத்து கமநல சேவைகள் மத்திய நிலையங்களிலும் காலநிலைக்கேற்ற துரித நீர்பாசன கமத்தொழில் (CSA) (மாரிதி) கிராமத்தினை ஸ்தாபித்தல். | 39 கிராமங்கள் | 15 கிராமங்கள் | 38.46 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | தொகுப்பு கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம். | 33 கிராமங்கள் | 16 கிராமங்கள் | 48.48 |
| (iv) | CSA இனை அடிப்படையாகக் கொண்ட மத்திய பருவ பயிர்செய்கை நிகழ்ச்சித் திட்டத்தினை செயற்படுத்தல். | 1695 ஹேக்கர் | 721.6 ஹேக்கர் | 42.57 |
| (v) | ASC 47 இற்கு விவசாய இயந்திர உபகரணங்கள் வழங்கல் | 568 அலகுகள் | 95 அலகுகள் | 16.72 |
| (vi) | உற்பத்தியாளர் சங்கங்களை ஸ்தாபித்தல் | 14 சங்கங்கள | 5 சங்கங்கள் | 35.71 |
| (vii) | கரிம உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் (திரவ-லீட்டர்) | 964,960 லீட்டர்கள் | 24,787 லீட்டர்கள் | 2.56 |
| (viii) | டெமோ கிராமங்கள் | 753 பயன்பெறுநர் | 350 பயன்பெறுநர் | 46.48 |

### 3.2 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை நிறைவு செய்வதிலான தாமதம்.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| பசுமை பூங்காக்கள் தாபித்தல், ஏஎஸ்சீ பணியாளர்களின் திறன் மேம்பாடு, வன விலங்குகளை பாதுகாக்கும் வேலி, விவாசாயிகள் அமைப்பின் திறன்களை கட்டிமெழுப்புதல், தொட்டிகளில் நீர் முகாமைத்துவ குழுக்களை ஸ்தாபித்தல், நீர்பிடிப்பு பகுதி மேம்பாடு, திருப்பனே மற்றும் அநுராதபுரவில் காலநிலைக்கேற்ற துரித நீர்பாசண கமத்தொழில் பண்ணை பள்ளி ஸ்தாபித்தல், மாவட்ட உற்பத்தியாளர் பேரவையை (PA) ஸ்தாபித்தல், PA மற்றும் Pes இன் தலைவர்களின் வளர்ச்சித் திறன்கள், PGs மதிப்பு சங்கிலி நடைமுறைகளை கடைப்பிடிப்பதில் உறுப்பினர்களுக்கு பயிற்சிகள், பண்ணை | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

வணிக பள்ளி அணுகுமுறை மற்றும் பயிற்சிக்கு விவசாயிகளை பதிவு செய்தல், பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல் மற்றும் அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவம், மதிப்பு சங்கிலி மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் உபகரணங்களை வழங்குதல், ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தப்பட்சம் இரண்டு சந்தைப்படுத்தல் இணைப்புக்களை உருவாக்கல் போன்ற நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டில் அவை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,210 மில்லியனில் ரூபா 1,389 மில்லியன் மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2019 மே 07 தொடக்கம் 2021 இறுதி வரை செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதி செயன் முன்னேற்றம் கருத்திற் கொள்ளும் போது 20 சதவீதமாக காணப்பட்டது. அதன் பிரகாரம் உரிய செயற்திட்ட முகாமைத்துவம் இல்லாமை காரணத்தினால் செயற்திட்டத்தின் நிதி செயன் முன்னேற்றம் திருப்தியற்ற மட்டத்தில் காணப்பட்டமை வலியுறுத்தப்படுகின்றதுடன் இலங்கையும் தற்போது பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துக் கொண்டிருப்பதனால் மேற்படி விடயங்கள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்படவில்லையெனில் செயற்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்வதல் கடினமானதென மேலும் வலியுறுத்தப்படல் வேண்டும். | செயற்திட்டத்தின் பிரதான கூறு தொட்டிகளின் மறுசீரமைப்பதாகும். 961 தொட்டிகள் அளவிடு செய்தவற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதில் 735 தொட்டிகள் அளவிடல் மற்றும் மதிப்பிடல் நிறைவு செய்யப்பட்டுள்ளன. | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நிதியினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் சுமூகமாக பேணிச் செல்லப்படுவதற்கு தேவையான பிரதி செயற்திட்ட பணிப்பாளர், நிதி முகாமைத்துவ நிபுணர், காலநிலைக்கேற்ற துரித நீர்பாசன நிபுணர், நீர் முகாமைத்துவ மற்றும் மேற்பார்வை நிபுணர், நீரியல் நிபுணர், உள்ளக கணக்காய்வாளர், பொறியியலாளர், மற்றும் சிரேஷ்ட தொழிநுட்ப அலுவலர்கன் போன்ற முக்கிய பதவிகளுக்கு இது வரையில் ஆட்சேர்பு செய்யப்படவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளின் அவசர தேவை அடிப்படையில் நிதி முகாமைத்துவ நிபுணர் பதவி பதிற் கடமை அடிப்படையில் ஆட்சேர்பு செய்யப்பட்டுள்ளது. நீர் முகாமைத்துவம் மற்றும் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி பதவிகளின் தேவை மதிப்பிடப்பட்டு தேவையான பிரதான பதவிகள் தாமதமின்றி நிரப்பப்படல் வேண்டும். |

மேற்பார்வை நிபுணர் மற்றும் நீரியல் நிபுணர்கள் ஆட்சேர்க்கும் தேவை இந்த சந்தர்ப்பத்தில் எழவில்லை என்பதுடன் தேவைப்படுகின்ற போது பதவிகளில் ஆட்சேர்க்கப்படும். விரைவில் அமுலில் வரும் வகையில் உள்ளக கணக்காய்வாளர், பிரதி செயற்திட்ட பணிப்பாளர் மற்றும் காலநிலைக்கேற்ற துரித நீர்பாசன நிபுணர்கள் ஆட்சேர்க்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.